# நூல் கொள்வனவு - 2017

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும் “கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யும் திட்டமானது” இவ்வருடமும் இடம்பெற உள்ளது. 01.01.2016 தொடக்கம் 11.03.2017 வரை கிழக்கு மாகாண படைப்பாளிகளினால் வெளியீடு செய்யப்பட்ட நூல்களை எமது திணைக்களத்தின் நூல் கொள்வனவு திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட தாங்கள் விரும்பினால் உரிய விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து இரு நூற்பிரதிகளுடன் அனுப்பி வைக்கலாம்.

அனுப்பி வைக்கப்படும் நூல்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்படும் என உறுதியளிக்க முடியாது. தகுந்தவை தெரிவுக்குழு மூலம் தெரிவு செய்யப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நூல்களை எதிர்வரும் 28.04.2017க்கு முன்னர் எமது திணைக்கள முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

நூற்பிரதிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டிய முகவரி:

**மாகாணப் பணிப்பாளர்**
**பண்பாட்டலுவல்கள் திணைக்களம் (கி.மா),**
**உட்துறைமுக வீதி,**
**திருகோணமலை.**

குறிப்பு:- ஏற்கனவே இவ்வருட (2017) நூற்கொள்வனவிற்காக நூல்களை அனுப்பியவர்கள் மீளவும் அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை.

விண்ணப்பப்படிவங்களை பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திலும் பிரதேச செயலகங்களிலும் http://www.ep.gov.lk/ எனும் வலைத்தள முகவரியினூடாகவும் பெற்றுக்கொள்ளலாம். மேலதிக தகவலுக்கு தாம் வசிக்கும் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் கலாசார உத்தியோகத்தருடன் அல்லது பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 026-2220036 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம்.
**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்காக குறிப்பிடப்பட்டுள்ள இறுதி திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் எவ் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**

திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்